# பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| | **திறைசேரி சுற்றுநிருபம்** | |
| (i) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்தில் காட்டப்பட்டவாறு நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க சுற்றுநிருபம் | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகளிலிருந்து உருவாகிய நிதி விளைவுகள் ரூபா 2,017,213 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 25,050,384 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 23,033,171 தொகையான முன்னேற்றம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 23,033,171 தொகையால் அதிகரித்தமைக்காக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது பின்வரும் வருமானங்களும் செலவுகளும் அதிகரித்தல் மற்றும் குறைவடைதல் காரணமாக இருந்தன.

(அ) அரசாங்க உதவி ரூபா 25,881,632 தொகையால் அல்லது 37.45% ஆல் அதிகரித்தல்.

(ஆ) ஏனைய உதவி ரூபா 2,437,871 தொகையால் அல்லது முடிவிலியால் அதிகரித்தல்.

(இ) ஊழியர் படிகள் ரூபா 2,390,129 தொகையால் அல்லது 10.27% ஆல் அதிகரித்தல்.

(ஈ) வழங்கல் அல்லது பாவனைப் பொருள் செலவு ரூபா 10,709,682 தொகையால் அல்லது 29.52% ஆல் குறைவடைதல்.

(உ) பராமரிப்புச் செலவு ரூபா 10,437,368 தொகையால் அல்லது 133.12% ஆல் அதிகரித்தல்

(ஊ) உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைச்செலவுகள் ரூபா 2,761,323 தொகையால் அல்லது 10.42% ஆல் அதிகரித்தல்.

(எ) பெறமானத்தேய்விற்கான ஏற்பாடு ரூபா 407,194 தொகையால் அல்லது 201% ஆல் அதிகரித்தல்

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பதவிநிலைக் கல்லூரி நடாத்திவருகின்ற பட்டப்படிப்பு கற்கை நெறிக்கு மீளாய்வாண்டில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 83 ஆக

இருந்ததுடன் அதற்கு நேரொத்த வகையில் 2010 ஆம் ஆண்டில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 74 ஆக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| **பட்டதாரிகள் பங்குபற்றிய நிறுவனம்** | **பட்டதாரிகளின் எண்ணிக்கை** | | **அதிகரித்தல்/ (குறைவடைதல்)** |
|---|---|---|---|
| | **2011** | **2010** | |
| இராணுவப் படை | 48 | 46 | 02 |
| கடற்படை | 13 | 11 | 02 |
| ஆகாயப் படை | 14 | 11 | 03 |
| பாதுகாப்பு அமைச்சு | - | 01 | (01) |
| வெளிநாடு | 08 | 05 | 03 |
| | 83 | 74 | 09 |

மேற்கூறிய விடயங்களின் பிரகாரம் பின்வருபவைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) பதவிநிலைக் கல்லூரி நடாத்தி வருகின்ற பட்டப்படிப்பு கற்கை நெறிகளுக்கு பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கை மீளாய்வாண்டின் போது 09 ஆல் அதிகரித்திருந்தது.

(ஆ) வருமானம் மற்றும் செலவுக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவு ரூபா 99,455,085 ஆக இருந்ததுடன் அதற்கிணங்க ஒரு பட்டதாரி தொடர்பாக ரூபா 1,198,254 தொகையான கிரயம் பதவிநிலைக் கல்லூரியினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டில் ஒரு பட்டதாரிக்காக ரூபா 1,272,551 தொகையான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.2 இனங்காணப்பட்ட நட்டம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாதாந்த நீர்ப்பட்டியல்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது குறித்த திகதிகளில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட கழிவுச் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும் 2011 சனவரி

மாதத்திலிருந்து 2011 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கான நீர்ப்பட்டியல்களைக் குறித்த திகதிகளில் தீர்த்துவைப்பதற்கு முடியாது போனதன் காரணத்தினால் ரூபா 66,667 தொகையான கழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு கல்லூரிக்கு காணப்பட்ட வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாதாந்த மின்சாரப் பட்டியல்களைக் கொடுப்பனவு செய்யும் போது விலைப்பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட குறித்த திகதிகளுக்கு முன்னர் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 45,345 தொகை தண்டப்பணமாக இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

மேலுள்ள 2 ஆம் பந்தி தொடர்பாக நி.பி 210(1) மற்றும் 210(2) தொடர்பாக உங்களின் அவதானம் கோரப்படுகின்றது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் உள்ளடக்கப்பட்டவைகளை நிறைவேற்றுவதற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கொள்வனவுத் திட்டம்

2006 பெப்ரவரி 28 ஆந் திகதிய எஸ்பீ/என்பீஏ ஆம் இலக்க சனாதிபதியின் செயலாளரின் சுற்றுநிருபத்தின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் பலவீனமான கட்டுப்பாட்டுத்துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நடைமுறையற்ற சொத்துக்களை கணக்குவைத்தல்

(ஆ) செலவுக் கட்டுப்பாடு

(இ) நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்களைக் கொடுப்பனவு செய்தல்